DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 205/2018**

அ.சா.– 9

| | |
|---|---|
| பெயர் : திரு. கனகராஜ் | ஜாதி: |
| த/பெ. : திரு. வீராசாமி | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுக்கா : | வயது : |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 13th day of February, 2023.

( எதிரி ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் தற்பொழுது தாரமங்கலம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பாய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 05.04.2017 ம் தேதி நான் தீவட்டிப்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலாராக பணியிலிருந்தபொழுது தீவட்டிப்பட்டி காவல்நிலைய கு.எண். 170/2017 இதச.பிரிவு 302 ன் கீழான முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகாரையும் ஆய்வாளர் திரு.ரஜினிகாந்த் உத்தரவின்பேரில் ஓமலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 05.04.2017 ம் தேதி காலை 9.50 மணியளவில் ஒப்படைத்து, கடவுச்சீட்டில் ஒப்புதல்பெற்று நிலையம் திரும்பி அறிக்கை சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை (எதிரி தரப்பில்)**

தீவட்டிப்பட்டி காவல்நிலையத்திலிருந்து ஓமலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது.

மறுமுதல்விசாரணை இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.** 205/2018

அ.சா.– 10

| | |
|---|---|
| பெயர் : திரு. மாதேஷ் | கிராமம் : |
| த/பெ. : திரு. பச்சையப்பன் | தொழில்: |
| வயது : | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 13th day of February, 2023.

(எதிரி ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் தற்பொழுது மேச்சேரி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். கடந்த 05.04.2017 ம் தேதி நான் தீவட்டிப்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபொழுது தீவட்டிப்பட்டி காவல்நியை கு.எண். 170/2017 இ.த.ச. பிரிவு 302 ன் கீழான வழக்கில் கொலையுண்டு இறந்துபோன திருப்பதி என்பவரின் பிரேதத்தையும், பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்தையும் ஆய்வாளரிடமிருந்து பெற்று சேலம் அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ பேராசிரியரிடம் ஒப்படைத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.–11**.

பின்பு மருத்துவரிடம் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். பிரேத பரிசோதனையின்போது உடன் இருந்தேன். பிரேத பரிசோதனை முடிந்தபின்பு பிரேதத்தை திருப்பதியின் உறவினர்கள் வசம் ஒப்படைத்தேன். பின்பு மருத்துவரால் சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஆய்விற்காக ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனையின்போது பிரேதத்தின் மீதிருந்து மருத்துவரால் கைப்பற்றப்பட்ட பச்சை, வெள்ளை, கருப்பு

கட்டம் போட்ட இரத்தம் படிந்த லுங்கி மற்றும் டிராயர் மாடல் ஜட்டி ஆகியவற்றை மருத்துவரிடமிருந்து பெற்று ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை(எதிரி தரப்பில்)</u>:-

நான் சொன்ன நாள் நேரத்தில் ஆய்வாளரிடம் வேண்டுகோள் கடிதம் பெற்று, மருத்துவரிடம் ஒப்படைக்கவில்லை என்றும், பிரேதத்தை அடையாளம் காட்டவில்லை என்றும், பிரேத பரிசோதனையின்போது உடன் இல்லை என்றும், மருத்துவரிடமிருந்து எவ்வித பொருட்களையும் பெற்று ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மறுமுதல்விசாரணை இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.